சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 23.01.2026
வா.சா.1 –போஸ் S/o நடராஜன்
O.S. No.15/2022
(மனுவின் பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)
குறுக்கு விசாரணை :

சாட்சியிடம் கொடி வழிஜாபிதா ஒன்று காட்டப்பட்டு, சாட்சி அதை பார்வையிட்டு சரிதான் என்று கூறவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் இந்த வழக்கில் 40ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வா.சா.ஆ.22ல் இருந்து வா.சா.ஆ.30 வரையிலான ஆவணங்களும் வா.சா.ஆ.40 ஆவணமும் ஒளிநகல்கள் என்றால் சரிதான். அதற்குரிய அசல் எங்குள்ளது என்றால் அதை எழுதி கொடுத்தவர்களிடமே அசல் உள்ளது அவர்கள் நகல் தான் என்னிடம் கொடுத்தார்கள். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பொய்யானது என்றும் அதை நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.40 ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டு அது ஒளிநகல் என்று சாட்சி குறிப்பிடுகிறார். வா.சா.ஆ.40 ஆவணத்தின் அசல் மூத்தவரான காசியிடம் உள்ளது அவர்தற்போது உயிருடன் இல்லை. காசியிடம் உள்ள அசல் ஆவணம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் அவருடைய மக்களிடம இருக்கலாம். என்னிடம் அசல் இல்லை. வா.சா.ஆ.40 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் அது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் விபரத்தில் 7 இன சொத்துக்களில் அளவீடுகள் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கடைகள் அளவீடுகள் எதுவும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை , மொத்த சொத்து விஸ்தீரணத்தை நான் சொல்லியுள்ளேன். மொத்த சொத்து விஸ்தீரணமான 8.76 செண்டை பொறுத்து நான்குமால்

சொல்லியிருக்கிறேனா என்றால் மொத்தமாக சொல்லவில்லை தனித்தனி கடைகளுக்குரிய நான்குமாலை சொல்லியிருக்கிறேன். பூர்விக பாத்தியப்பட்ட மொத்த சொத்து 79செண்டு என்றால் சரிதான். அதை 26.3 செண்டாக 3 பேர்கள் சின்னையா என்ற ஆதப்பனும், முத்தணன் என்ற பெரியகருப்பன், வெள்ளையன் அம்பலம் ஆகிய மூவரும் பிரித்து கொண்டார்கள். அவ்வாறு பிரித்து கொண்டதற்கு ஆவணம் இல்லை, வாய்மொழி பாகமாக பிரித்து கொண்டார்கள். எந்த வருடம் பிரித்து கொள்ளப்பட்டது என்பதை வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. சொத்து பிரித்த காலத்தில் எனக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவரவர் பாகத்தை அனுபவித்து வந்த விபரம் தெரியும். சின்னையா என்ற ஆதப்பன என்பவருக்கு 3 மக்கள், அவர்கள் பெயர் மாணிக்கம், ராமசாமி, நடராஜன். என்னுடைய அப்பா தான் நடராஜன் அந்த வழியில் எனக்கு 8.76 செண்டு பாத்தியம் கோருகிறேன். 26.3 செண்டு பாகத்தை யார் யார் பாகத்தில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற விபரம் பற்றி வழக்கில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அனுபவித்து வந்ததற்கு 26.3 செண்டை தனித்தனியாக அனுபவித்து வந்ததற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்க் செய்துள்ளேனா என்றால் இல்லை. 26.3 செண்டில் 8.76 செண்டு எந்த பகுதியில் வருகிறது என்பதை வழக்கில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு கடைக்கும் உரிய நான்குமாலை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். மாறிமாறி வருவதால் எந்த பகுதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி விபரத்தை 8.76 செண்டு 26.3 செண்டில் மாறிமாறி வருகிறது என்ற விபரத்தை எனது வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மொத்த விஸ்தீரணம் 79 செண்டிற்கும் அதில் பாகம் பிரிக்கப்பட்டதாக சொல்லப்படும் 26.3 செண்டிற்கும், தற்போது கோரியிருக்கும் 8.76 செண்டிற்கும் வரைபடம் , புல எல்லை வரைபடம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

சாட்சியிடம் புல எல்லை வரைபடம் ஒன்று காட்டப்பட்டு, சாட்சி அதை பார்வையிட்டு அது வழக்கு சொத்துக்குரிய புல எல்லை வரைபடம் தான் என்று அறுதியிட்டு கூறமுடியாது என்று குறிப்பிடுகிறார். மொத்தம் 79 செண்டும் ஆதன் அம்பலம் டிரஸ்ட் தர்மகர்த்தா பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளது என்றால் தெரியாது. சாட்சியிடம் 1383ம் பசலி ஆண்டிற்கான 404/1 அடங்கல் கணக்கு ஆதப்பன் அம்பலம் பெரியல் தரிசாக இருப்பதாக காட்டப்பட்டு சாட்சி அது சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1432ம் பசலி ஆண்டிற்கான 404/1 அடங்கல் கணக்கு ஆதப்பன் அம்பலம் பெரியல் தரிசாக இருப்பதாக காட்டப்பட்டு சாட்சி அது சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது வரை சர்வே நம்பர் 404/1 ஆதப்பன் அம்பலம் டிரஸ்ட் பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சொத்து வாய்மொழியாக பிரித்ததாக சொல்வது தொடர்பாக வருவாய் துறை ஆவணங்களில் அவரவர் பாகத்திற்கு மாற்றம் வருவாய் துறை ஆவணங்களில் மாற்றம் செயல்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல, முத்தணன் அம்பலம், விவேகானந்தன், மாணிக்கம் மகன் பாண்டி, ராமசாமி மகன் கதிரேன், மாரியப்பன் மகன் சின்னையா ஆகியோர் மாற்றியிருக்கிறார்கள். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 79 செண்டு சொத்திற்கு மண்டகப்படி தற்போது வரை நடத்துகிறேனா என்றால் நடத்திவருகிறோம். கல்யாணசுந்தரேஸ்வரர் கோவில், திருவாதவூர் திருமறை நாதர் கோவில் ஆகியவற்றில் இருந்து மண்டகப்படி நடத்தப்படுவது வழக்கம் என்றால் சரிதான். மண்டகப்படி நடத்த வேண்டும் என்பதற்காக தான் ஆதப்பன் அம்பலம் டிரஸ்ட் சார்பாக 14.12.2022

அன்று ஒரு டிரஸ்ட் ஆவணம் ஒன்றை ஏற்படுத்தி பதிந்துள்ளார்கள் என்றால் தெரியாது. ஆனால் வருடா வருடம் மண்டகப்படி நடத்துவது வழக்கம். ஆதப்பன் அம்பலத்தின் வாரிசுகளான மாணிக்கம், ராமசாமி, நடராஜன் ஆகியோர் தான் மண்டகப்படி வருடாவருடம் நடத்திவருகிறோம். வாடகையை வாங்கி ஆளுக்கு ஒருமுறை நடத்துவதாக எங்களுக்குள் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம். டிரஸ்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற விபரம் தெரிந்தும், அதை நான் வேண்டுமென்றே தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே முதலில் செய்த குறுக்கு விசாரணையில் மேற்படி டிரஸ்ட் பத்திரமானது என்னிடம் காட்டப்பட்டு அதை நான் ஒப்புகொண்டு மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1ஆவணத்தில் அது மண்டகப்படி நடத்துவதற்காக ஏற்படுத்தவேண்டும் என்றும் அதை யாராலும் பாராதீனம் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. டிரஸ்ட் இருப்பது தெரிந்து நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லிவிட்டு தற்போது அதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுவிட்டு தற்போது பொய்யுரைத்து மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நபர் ஏற்றுகொண்டு தற்போது வரை மண்டகப்படியை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். சாட்சியிடம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சார்பாக ரகுபதி ஆதப்பன் அம்பலம் வகையறா பெயரில் ரசீது மண்டகப்படி நடத்தியது தொடர்பாக ரசீது கொடுக்கப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். மேற்படி சாட்சி சரிதான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் புகைப்படம் ஒன்று காட்டடப்பட்டு அதை 2020ம் ஆண்டு ஆதப்பன் அம்பலம் மகன் நடராஜன் மகன் மாணிக்கம் மண்டகப்படி நடத்தியது தொடர்பாக ஒருவருடம் அவருடைய பெயரில்

அன்னதானகூடம் அமைக்கப்பட்டு வழக்கிற்காக பேனர் கட்டப்பட்டு எடுக்கப்பட்டது என்று சாட்சி ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2020ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் இல்லை, ஆனால் பஞ்சாயத்தில் பிரச்சினை பேசப்பட்டுவந்தது. சர்வே நம்பர் 404/1ல் மண்டகப்படி வருடாவருடம் அவரவர் சுற்றில் வரும்போது, அவரவர்கள் மண்டகப்படி நடத்துவார்கள். தற்போது வரை அவ்வாறு தான் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். 2026-27ம்ஆண்டு என்னுடைய முறையில் நான் மண்டகப்படி நடத்தவேண்டும் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் சுற்றுமுறையில் மண்டகப்படி நடத்தப்பட்டுவருகிறது என்றால் சுற்றுமுறையில் நடத்துவது என்பது சரிதான். ஆனால் பி.சா.ஆ.1 மூலமாக நடத்துவது என்பது எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட முறைப்படி தான் மண்டகப்படி சுற்றுமுறையில் நடந்து வருகிறது என்றும் நான் ஆவணத்தை மறுப்பதற்காக தான் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் எந்த ஆவணத்திலும் 79 செண்டை பொறுத்து ஏற்கனவே பாகம் பிரித்ததாக சொல்லப்படவில்லை என்றால் அதுபற்றி சரியாக தெரியவில்லை. அதேபோல் 79 செண்டை பொறுத்து 26.3 செண்டாக 3 பாகமாக பிரிக்கப்பட்டு அதில் 8.76 செண்டு பாத்தியம் இருப்பதாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்தந்த பாகஸ்தர்கள் அவரவர் பாகத்தை அனுபவித்து வருவதற்காவது வருவாய்துறை ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கும் வா.சா.ஆ.40 ஆவணத்தை நான் வழக்கிற்காக பாகம் பிரித்து கொண்டதாக உற்பத்தி செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.அவ்வாறு உற்பத்தி செய்ததால் தான் அசல் ஆவணம் என்னிடம் இல்லைஎன்றால் சரியல்ல. அசல் ஆவணம் மூத்தவர் காசியிடம் தான் உள்ளது. எந்த தேதியில் 79 செண்டு பாகம் பிரிக்கப்பட்டது என்றோ, 26.3

செண்டாக எந்த தேதியில், எந்த மாதம் எந்த வருடத்தில் பிரிக்கப்பட்டது என்றோ, குறிப்பிட்டு வா.சா.ஆ.40 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 26.3 செண்டு நிலமானது 8.76 செண்டாக 3 பாகமாக பிரிக்கப்பட்டதாக கூறுவதையும் வா.சா.ஆ.40 ஆவணத்திலும், வழக்குரையிலும் எந்த தேதியில், எந்த மாதம் எந்த வருடத்தில் பிரித்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 20.07.2007 என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கும் தேதியை தவிர வழக்குரையில் எந்த இடத்திலும், வழக்குமூலத்திற்காக தேதி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் வாயிலாக தான் தற்போது வரை மண்டகப்படி நடநந்து வருகிறது என்றும் அதை மறைத்து என் வசதிக்கேற்ப பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.01.23 22:11:56 +0530

Sub Judge
Melur